Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம்௵ நவம்பர்௴ 28உ, வெள்ளிக்கிழமை. [இதழ் 37

## யுத்த 'சப்ளை' சாமான்கள் உற்பத்தி
## இந்தியாவின் தனிச்சிறப்பு
### கிழக்குப் பகுதி நாடுகளின் தேவை

### உருளைக்கிழங்கு வற்றலுக்கு கிராக்கி

கிழக்குப் பிரதேசங்களில் உள்ள நாடுகளுக்கு அதிகமான யுத்த சாமான்கள் 'சப்ளை' செய்வது இந்தியாதான். இதனால் இந்தியா மிகுந்த லாபமடைந்து வருகிறது. கீழ்த்தொகுதி நாடுகளில் வேறெந்த நாடும் அவ்வளவு லாபம் அடையவில்லை. இந்த நாடுகளெல்லாம்கூட யுத்த 'சப்ளை' சாமான்களை இந்தியாவிலிருந்து தருவிக்க விரும்புகின்றன. ஏனென்றால், பூகோள அமைப்பில் இந்தியா ஒரு மத்திய ஸ்தானத்தில் இருக்கிறது; மத்திய கிழக்குப் பிரதேசத்துக்கும், தூரக்கிழக்குப்பிரதேசத்துக்கும்,—அதாவது இராக், இரான், சிரியா முதலிய நாடுகளுக்கும், சீனா, ஜப்பான் முதலிய நாடுகளுக்கும்—மத்தியில் இந்தியா இருக்கிறது.

இந்தியா யுத்தசாமான் உற்பத்தி செய்வதில் அபிவிருத்தி அடைவதற்காக, அரசாங்கத்தார் சகல விதமான உதவிகளும் அளித்துவருகிறார்கள்; தூரக்கிழக்குப் பிரதேசத்தில், ஒருவேளை, புதிய யுத்தம் ஆரம்பிக்கப்படுமானால், அதற்கு வேண்டிய பல யுத்த சாமான்கள் இந்தியாவிலிருந்துதான் போகவேண்டும். இந்தியாவிலிருந்து சுலபமாகவும், சீக்கிரமாகவும், இந்த சாமான்கள் அனுப்பக்கூடும். அப்படி அனுப்பினால் பிரிட்டிஷ் கப்பல் படையின் மேலாவது, அல்லது அமெரிக்கக் கப்பற் படையின் மேலாவது உள்ள பாரம் குறையும்.

### சாமான் உற்பத்தி முன்னேற்றம்

இந்தியாவின் முக்கியமான தொழிற்சாலைப் பட்டணங்களிலெல்லாம், சில மாதிரி யுத்தப்பொருள்கள் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன. அவை யுததத்திற்கு அவசியமாக வேண்டியபொருள்கள். இந்தியத் தொழிலபிவிருத்தியில் தைரியமாகத் தொண்டு செய்யவருபவர்கள் இப்பொருள்கள் செய்யும் வேலையில் ஈடுபடலாம். இந்தியாவில் யுத்தத் தொழில்கள் அதிகவிரைவாக முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. ஆனால் சில விஷயங்களில் முன்னேற்றம் தடைப்பட்டிருக்கிறது. மின்சார சாமான்கள், கம்பிளித் துணிவகைகள், தகர டப்பிகளில் உணவுப்பொருள்கள் கெடாமல் அடைத்து வைத்தல்—இவைகளில் இந்தியா முன்னேற்றம் அடையவில்லை. ஆகையால் இது சம்பந்தமான பொருள்கள் கிழக்குப் பகுதியில் உள்ள மற்ற நாடுகளிடம் வாங்கப்படுகின்றன.

கீழ்த்தொகுதி யுத்த 'சப்ளை' சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு ஒவ்வொரு நாட்டுக்கும் என்ன சாமான்கள் வேண்டுமென்பதை, இந்த சபை முன்னமேயே விசாரித்துத் தெரிந்து கொள்ளுகிறது. ஒரு நீண்டகால அளவுக்கு அந்த நாடுகள் இந்தியாவிலிருந்து சாமான்கள் வாங்குவதற்கு, இச்சபை ஏற்பாடு செய்கிறது. இதனால் யுத்தப் பொருள்களின் உற்பத்தி இந்தியாவில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாக, சணலினால் செய்யப்படும் பொருள்கள் இந்தியாவிலிருந்து அனுப்பப்படுகின்றன. 1942-ம் ௵ அக்டோபர் ௴ வரைக்கும் யுத்தத்திற்கு வேண்டிய சணல் பொருள்கள் 'சபளை' செய்வதற்கு இந்தியா ஒப்பந்தம் செய்திருக்கிறது. இதர விஷயங்களில், இந்திய தொழிற்சாலை யந்திரங்கள், சாமான் உற்பத்தி செய்வதில் எவ்வளவு வேலை தாங்கமுடியுமோ, அதற்குத் தகுந்ததுபோல சாமான் உற்பத்தி வேலை அமைக்கப்படுகிறது.

### இந்தியாவின் பிரதிநிதி

கீழ்த்தொகுதி சபையில் இந்தியாவின் பிரதிநிதியாக, மிஸ்டர் எம். எஸ். ஏ. ஹைதரி நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் சுயேச்சையாக எந்தக்காரியம் வேண்டுமென்றாலும் செய்யலாம். இந்தியாவின் தொழிலபிவிருத்தி விஷயங்களைப்பற்றி அவர் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார். இந்திய அரசாங்க 'சப்ளை' இலாகாவுடன் அவர் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கிறார். அடிக்கடி இந்திய யுத்த சாமான் உற்பத்தி தொழிற்சாலைகளை அவர் நேரில் சென்றுபார்க்கிறார்.

சமீபத்தில் அவர் பம்பாய்க்குச் சென்றிருந்தார். அங்குள்ள அநேக தொழிற்சாலைகளையும், இஞ்சின்கள் செய்யும் சாலைகளையும் பார்வையிட்டார். பம்பாயிலுள்ள இஞ்சினீயரிங் கமிட்டியையும், யுத்த சப்ளை கமிட்டியையும் அவர் சந்தித்து, பல விஷயங்களைப் பற்றிக்கலந்து பேசினார். யுத்த 'சப்ளை' விஷயமாக பம்பாயில் செய்துவரும் முயற்சியைப் பற்றி விவரமாக பேசப்பட்டது.

இந்திய வர்த்தகர்கள் சபையின் நிர்வாகக் கமிட்டி மிஸ்டர் ஹைதரியைச் சந்தித்து, கீழ்த்தொகுதி சபையின் வேலையைப்பற்றிய சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொண்டது. அடுத்த பிப்ரவரி மாதம் வந்தால், இக்கமிட்டி நியமிக்கப்பட்டு ஒரு வருஷகாலம் ஆகிறது.

### சென்ற மாத விவரங்கள்

கீழ்த்தொகுதி நாடுகள் இந்தியாவுக்குக் கொடுத்து வரும் 'ஆர்டர்'கள் அக்டோபர் மாதத்தில் மிகவும் அதிகமாயிருக்கின்றன. 'ஆர்டர்'களின் அளவு மட்டுமன்றி, 'ஆர்டர்' செய்யப்படும் பொருள்களின் வகைகளும் அதிகப்பட்டுள்ளன. முக்கியமான பொருள்களில் மட்டும் 70-க்குக் குறையாத வகைகளுக்கு 'ஆர்டர்' கொடுக்கப்பட்டிருக்கிறது. வழக்கம் போல் ஜவுளி தினுசுகளுக்குத் தான் இதில் முதல் ஸ்தானம். பருத்தி ஷர்ட்டுகள், காக்கி அரை நிஜார்கள், கால் சட்டைகள், காக்கி ட்ரில், நீல ட்ரில், காக்கி ஜிப்பாக்கள், நிஜார்கள், ஷர்ட் துணி, டுவில் துணி, நீல மஸ்லின், வெள்ளை மஸ்லின், துப்பட்டிகள், துண்டுகள், கொசு வலைகள், வலைத் துணி முதலியவையுட்பட சுமார் 40 வகைகளுக்கு 'ஆர்டர்' கொடுக்கப்பட்டிருக்கிறது.

### ஜவுளி வகைகள்

ரப்பர் பூசிய துணி, நீர் ஊறுத உறைத் துணிகள், சிப்பாய்களுக்குவேண்டிய சாமான் பைகள், கித்தான் பைகள், கடற் பிரயாணத்துக்கு வேண்டிய பைகள், கூடாரங்கள், கயிற்றுப் பாய், மணல் சாக்குகள், துடைப்பதற்குதவும் சிக்கு நூல், தையல் நூல் முதலியவைகள் இந்தியாவிலிருந்து 'சப்ளை செய்யப்படும் இதர ஜவுளி வகையராக்கள்.'

இவையல்லாமல் கால் ஜோடுகள், நீள ஜோடுகள், பலவகைப்பட்ட பூட்ஸ்லேசுகள், தலைவாரும் 'ப்ரஷ்'கள், பித்தளை, வெள்ளை உலோகம் இவற்றால் செய்த பக்கிள், தைக்கும் ஊசிகள், பசை, ஆளிவிதை எண்ணெய், டர்பென்டைன், பலவகை வர்ணங்கள், உலோகப் பாலிஷ், சிமிட்டி, மரக்கம்பங்கள், மேஜைகள், கூடார வாரைகள், ரயில் தண்டவாளத்துக் கடியில் போடும் கட்டைகள் முதலியவைகளுக்கும் இந்தியாவுக்கு 'ஆர்டர்' கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆஸ்டிரேலியா, சிலோன், தென்னாப்பிரிக்கா, மத்தியக் கீழ்த்திசை, இவைகள் 'ஆர்டர்' கொடுத்துள்ள நாடுகளுள் முக்கியமானவை. இவையெல்லாம் கீழ்த்தொகுதி நாடுகள் சம்பந்தமான சப்ளை சபை மூலமாக இந்த ஏற்பாடு செய்திருக்கின்றன.

### உருளைக்கிழங்கு வற்றல்.

2,700 டன்னுக்கு மேற்பட்ட உருளைக் கிழங்கு வற்றலுக்கு இதுவரை இந்தியாவில் 'ஆர்டர்' கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் பெரும் பகுதியை இந்தியா

முழுதுமுள்ள பல கம்பெனிகள் தயார்செய்து வருகின்றன. இதற்கென்று ஒவ்வொரு வாரமும் புதிய உற்பத்திச் சாலைகள் ஏற்பட்டுவருகின்றன. சென்ற மாதத்தில் மட்டும் 16 புதிய உற்பத்திச் சாலைகள் அரசாங்க ஜாபிதாவில் சேர்க்கப்பட்டன. இவைகளுக்குப் பரீக்ஷார்த்தமாய்க் கொஞ்சம் 'ஆர்டர்' கொடுக்கப்பட்டது. இவைகளில் சிலவற்றோடு உருளைக் கிழங்கு 'சப்ளை'க்காக ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது.

போர் புரிபவர்களுக்கு உருளைக்கிழங்கு வற்றல் மேலும் மேலும் அதிகமாய் வேண்டியிருக்கிறது. இதனால் பல பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றைக் கவனிப்பதற்காக விவசாய டைரெக்டர்கள், சப்ளை கன்ட்ரோலர்கள், பற்பல கம்பெனிகளின் பிரதிநிதிகள் ஆகியோரின் கூட்டமொன்று சமீபத்தில் கூட்டப்பட்டது.

### கூட்டுறவு முறை

சப்ளை இலாகா, இன்ஸ்பெக்டர்களையும் ரஸாயன சாஸ்திரிகளையும் ஏராளமாய் நியமித்து இதன் தயாரிப்பை முன்னிலும் நன்றாகப் பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், சில குறிப்பிட்ட இடங்களில் பரிசோதனைச் சாலைகள் வைத்து வசதிகளளிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதனோடு, ஒப்பந்தக்காரர்கள், மார்கெட்டிங் உத்தியோகஸ்தர்களின் உதவிகொண்டு, கூட்டுறவு முறையில் உருளைக்கிழங்கு வாங்குவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், கல்கத்தாவிலுள்ள இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கத்தலைவர் ஒரு விஷயத்தை வெளியிட்டார். உருளைக்கிழங்கு வற்றல் உற்பத்தி செய்யும் விதம் சர்க்கரை ஆலைகளுக்குத் தெரியாதாயினும், விவசாய முறைகளில் அவைகளுக்கு அனுபவங்கிடையாதாயினும், சுமார் 50 ஆலைகள் இதை உற்பத்தி செய்ய ஒத்துக்கொண்டிருப்பதாக அவர் கூறினார். ஆகவே, உருளைக்கிழங்கு விளையும் பிரதேசங்களிலுள்ள சர்க்கரை ஆலைகளோடு இது விஷயமாய்க் கலந்தாலோசிக்கத் தாம் உத்தேசித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

### யுத்தத் தொழில்களுக்கு நிலக்கரி

யுத்தப் பொருள்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளுக்கு நிலக்கரி தடையில்லாது கிடைப்பதற்காக ரயில்வண்டிகள் உதவுவதை கவனித்து அனுப்புவதற்கு இந்திய அரசாங்கத்தார் தகுந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இத்தகைய தொழில்களுக்கு நிலக்கரி சரியாய்க் கிடைக்காதது சமீபத்தில் அதிக கவலையளித்து வந்தது. எந்தெந்தக் கம்பெனிகள் பெரும்பாலும் யுத்தப் பொருள் உற்பத்தி வேலை செய்கின்றனவோ, அவைகளுக்கு 20 நாளைக்கு வேண்டிய நிலக்கரி அளவு குறைந்துவிட்டால், உடனே சுரங்க இஞ்சினீயருக்குத் தெரிவிக்கவேண்டுமென்று அரசாங்கத்தார் சப்ளை கண்ட்ரோலர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். சப்ளை கண்ட்ரோலர்களிடமிருந்து செய்தி வந்த உடனே, அந்தந்தக் கம்பெனிக்கு நிலக்கரி வண்டிகள் போய்ச் சேரும்படி ஏற்பாடு செய்ய, பிரதம சுரங்க எஞ்சினீயருக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்வதனால் 20 நாளுக்கு வேண்டிய அளவு நிலக்கரி எப்போதும் குறையாமல் யுத்தத் தொழிற்சாலைகளிடம் இருக்கும்.

---

# லிபியாவில் யுத்தம்

## 6,000 மைல் நீண்ட போர் முனை

## பிரிட்டிஷாரின் முன்னேற்றம்

### மேற்குப் பாலைவனத்தில் ஜெர்மானியர் நிலைமை

ஆப்பிரிக்காவில் ஒரு பிரம்மாண்டமான யுத்தம் நடக்கிறது. லிபியாவில் பிரிட்டிஷார் ஒரு பெரிய போரை வெற்றிகரமாக நடத்தி, முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். வடக்குக் கரையோரத்தில் உள்ள எதிரிகளின் கொத்தளங்களை, பிரிட்டிஷ் கப்பல் படை நாசம் செய்துவருகிறது. தரையிலும், ஆகாயத்திலும் உள்ள எதிரி விமானங்களை, பிரிட்டிஷ் விமானப் படை ஏராளமாகச் சுட்டு வீழ்த்திக்கொண்டிருக்கிறது. டாங்கிகள், துருப்புகள் ஒன்று சேர்ந்து இருக்கும் இடங்கள், இவைகளை எல்லாம் பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கி வருகின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள், அதில் முக்கியமாக இந்தியத் துருப்புகள், எதிரிகளுடன் மெச்சத்தகுந்த விதமாகப் போராடிக்கொண்டிருக்கின்றன. லிபியா யுத்தம் உலக சரித்திரத்திலேயே ஒரு மகத்தான யுத்தம் என்று கருதப்படும். இதில் யுத்த தந்திர முறைகளும், சாமார்த்தியமான பாய்ச்சல்களும் அருமையாக உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த யுத்தப் போர் முனை சுமார் 6,000 மைல் தூரம் நீண்டிருக்கிறது. தோப்ருக்கில் ஆரம்பித்து எகிப்து, பாலஸ்தீனம், சிரியா, இராக் முதலியவைகள் மூலம் சென்று, கடைசியில் இரானில் இந்தப் போர் முனை முடிகிறது. நீண்ட தூரம், பலவகைப்பட்ட நாடுகள், மலைகள், பாலை வனங்கள், பெரிய ஆறுகள், பயிர் செய்யப்பட்ட பிரதேசங்கள் இவைகளெல்லாம் இப்போர் முனையில் இருக்கின்றன. ஒவ்வொரு நாட்டுக்கும் தனித்தனியாக போக்குவரவு சாதனம் இருக்கிறது. அவைகளை எல்லாம் தொடர்ச்சியாகச் சேர்த்து, ஐக்கியமாக வேலைசெய்வதற்கு பிரிட்டிஷார் பெருந்தொண்டு செய்தார்கள். பிரிட்டனுடைய முயற்சியாலும், அமெரிக்காவின் உதவியாலும், போக்கு வரவு சாதனத்தை ஒழுங்குபடுத்தி, ஏராளமான துருப்புகள், யுத்த ஆயுதங்கள் 'சப்ளை' சாமான்கள் முதலியவைகளை மேற்குப் பாலைவனத்தில் சேமித்து வைத்துள்ளார்கள்.

### பிரம்மாண்டமான வேலை

எவ்வளவு பிரம்மாண்டமான வேலை நடந்திருக்கிறது என்பது சில விவரங்களால் தெரியவரும். பிரிட்டிஷ் ரயில்வே தொழிற்சாலைகள் இரானுக்காக 1,000 ரயில்வே சாமான் வண்டிகளையும் 142 இஞ்சின்களையும் 10 வாரங்களில் செய்து முடித்தன. ரயில் வண்டிகள் அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து அனுப்பப்பட்டன. இரான் நாட்டு வழியாகச் செல்லும் பெரிய ரயில் மார்க்கத்தில் இப்போது போய்க்கொண்டிருக்கும் ரயில் வண்டிகள், இந்த மாத முடிவிற்குள் நான்கு மடங்கு அதிகப்படுத்தப்படும். பந்தார் ஷாபூர் என்ற துறைமுகத்தில் தினந்தோறும் 2,000 டன் எடையுள்ள யுத்த சாமான்கள் வந்து சேருகின்றன. இதற்காக வேண்டிய துறைமுக வசதிகளை எல்லாம் அமெரிக்க இஞ்சினீயர்கள் செய்து வருகிறார்கள். பாரசீகக் குடாக் கடல்கரை வழியாக உள்ள துறைமுக வசதிகளை அதிகப்படுத்துவதற்கு இந்திய இஞ்சினீயரிங் கம்பெனிகள் வேலைசெய்து வருகின்றன.

பஸ்ராவில் ஒரு பெரிய ஆகாய விமானச்சாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அமெரிக்காவிலிருந்துவரும் ஆகாய விமானச் சாமான்களை இங்கு சேமித்து வைத்து, மாதம் ஒன்றுக்கு 300 விமானங்கள் பூட்டி அனுப்புகிறார்கள். சூயஸ் கால்வாய்க்கு வரும் அமெரிக்க சாமான் கப்பல்களிலிருந்து, ட்ரக்குகள், டாங்கிகள், யுத்த முஸ்தீப்பு மோட்டார்கள், விமானப் பாகங்கள், ஆகியவைகளை இறக்கி, வேண்டிய வேலை செய்வதற்கு அமெரிக்க ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படி மாதம் முப்பது கப்பல்கள் வந்துகொண்டிருக்கின்றன. பலூசிஸ்தானத்திலிருந்து இரானுக்குச் செல்லும் பெரிய பாதையைப் போன்ற பல பாதைகளிலும், மத்திய கிழக்குப் பிரதேசத்தில் உள்ள முக்கியமான துறைமுகங்களிலும் தேனீக் கூடுகளில் நடப்பதுபோல சுறுசுறுப்பாக வேலை நடந்து வருகிறது.

## புதிய விமான வழி

இப்போது புதிதாக, எகிப்தின் தலை நகராகிய கெய்ரோவிலிருந்து, இரானின் தலைநகராகிய டெஹரானுக்கு ஒரு விமான வழி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது பிரிட்டனுடைய விமான பலத்தினாலும், அமெரிக்காவின் உதவியினாலும் செய்ய முடிந்தது. "லாக்ஹெட் லோட்ஸ்டார்" என்ற அமெரிக்க விமானங்கள் இதற்காக உபயோகப்படுத்தப்படுகின்றன. இந்த விமானங்கள் பாக்தாத்திலிருந்து டெஹரானுக்கு மூன்று மணி நேரத்துக்குள் போய் விடுகின்றன. ரோட்டுவழியாகச் செல்வதானால் மிகுந்த கஷ்டத்துடன் மூன்றுநாள் பிடிக்கும். கெய்ரோவிலிருந்து பாக்தாத்துக்குப் போவதாயிருந்தால் இப்போது நான்கு மணி நேரம் பிடிக்கிறது; பாலைவனத்தின் வழியாகப் போனால் மூன்று நாள் பிடிக்கும்.

மேற்குப் பாலைவனத்தில் இரண்டு வாரங்களுக்கு முன் ஒரு புதிய பட்டாளம் தயார் செய்யப்பட்டது. இதற்கு எட்டாவது பட்டாளம் என்று பெயர். பிரிட்டிஷார் ஒரு பெரிய தனிப்பட்டாளம் ஏற்படுத்தியிருக்கிறார்களென்றால், அதற்கு வேண்டிய சகல விதமான யுத்த முஸ்தீப்பு சாமான்களும் அவர்கள் தயார் செய்து வைத்திருக்கவேண்டும் என்று தெரிகிறது. பிரிட்டிஷ் கடற்படை சர் ஆண்ட்ரூ கன்னிங்காம் அவர்களின் தலைமையின் கீழ் திறமையாக வேலை செய்துவருகிறது. எதிரிகளின் 175 கப்பல்கள், துருப்புக் கப்பல்களும், 'சப்ளை' கப்பல்களும், மத்தியதரைக் கடலில் முழுகடிக்கப்பட்டன. யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இத்தாலிய கப்பற்படை கீழ்க்கண்ட கப்பல்களை இழந்திருக்கிறது:—

"காண்டிடி கவூர்" என்ற பெரிய யுத்தக்கப்பல்; "பியூமி," "கோரிசியா", "போலா", "சாரா," என்ற பளுவான நான்கு சண்டைக் கப்பல்கள்; "அர்மாண்டோ டியர்ஸ்", "பார்த்தலமியூ கேலியானி" என்ற இரண்டு லேசான சண்டைக் கப்பல்கள்; "யூஜினியோடி சவாயோ" என்ற வகுப்பைச் சேர்ந்த கப்பல்; 25 நாசகாரிக் கப்பல்கள்; 10 'டார்பிடோ' கப்பல்கள்; 16 மோட்டார் கப்பல்கள்; இதல்லாமல் அநேக சப்மரீன்கள்.

லிபியாவில், தங்களுடைய துருப்புகளைச் சரியாகப் பாதுகாத்து, அவைகளுக்கு வேண்டிய 'சப்ளை' களை அனுப்புவதற்கு எதிரிகள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். ஏனென்றால், தெற்கு இத்தாலி, சிசிலி, லிபியாவிலுள்ள எதிரிகளுடைய ராணுவத் தளங்கள், பிரிட்டிஷ் விமானங்களால் தொடர்ச்சியாக தாக்கப்படுகின்றன.

## லிபியாவில் வெற்றிகள்

ஜெனரல் ரோம்மல் என்ற தலைவரின் கீழிருக்கும் எதிரித் துருப்புகள் இப்போது பிரிட்டிஷ் படைகளாலும், இந்தியப் படைகளாலும் பலமாகத் தாக்கப்படுகின்றன. லிபியாவில் பிரிட்டிஷார் ஆரம்பித்த சண்டையில், சென்ற சில நாள்களில் மெச்சத்தகுந்த வெற்றியை அவர்கள் அடைந்திருக்கிறார்கள். திடீரென்று தாக்கியதால், ஜெர்மானியர்கள் பிரமித்துப் போனார்கள். அவர்கள் சமாளிப்பதற்குள், இந்தியத் துருப்புகள் சிடிஓமார் நுவோவோமைப் பிடித்துக்கொண்டார்கள்; சிடிரெசே, கபூசோ கோட்டை, பார்டியா, காம்பட், ஆகிய இடங்கள் பிரிட்டிஷ் துருப்புகளாலும், சாம்ராஜ்யத் துருப்புகளாலும் கைப்பற்றப்பட்டன. எதிரிகளுடைய துருப்புகள் நாசமாக்கப்பட்டன. மூன்று நாள்களில், நேசத் துருப்புகள் 100 மைல் முன்னேறிச் சென்றிருக்கின்றன.

தோப்ரூக், எல்கோபி, சோலும் என்ற முக்கோணத்தில் ஜெர்மன் படைகள் அகப்பட்டுக்கொண்டு திண்டாடுகின்றன.

# ஹிட்லர்—பீத்தான் சந்திப்பு ஏற்பாடு

விஷி அரசாங்கத்துடன்ஹிட்லர் இன்னும் நெருக்கமாக உறவாட விரும்புகிறார். ரஷ்யாவில் ஹிட்லர் நினைத்த காரியம் நிறைவேறவில்லை. லிபியாவில், பிரிட்டிஷார் வெற்றியடைந்து வருகிறார்கள். இந்த நிலைமையில் விஷி அரசாங்கத்தை ஜெர்மனிக்குக் கையாளாக வைத்துக்கொண்டால், ஆப்பிரிக்காவைப் பொறுத்துவரையிலாவது சில சௌகரியங்கள் செய்துகொள்ளலாம் என்பது ஹிட்லரின் நோக்கம்.

ஆப்பிரிக்காவில் பிரெஞ்சு கடற்படைத்தளமாகிய பிசார்ட்டாவைக் கொடுக்கும்படி ஹிட்லர் கேட்டார். ஜெனரல் வேகான் என்ற பிரெஞ்சு தளகர்த்தர் அதைக் கொடுப்பதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. உடனே அவர் வேலையிலிருந்து விலக்கப்பட்டார். விஷி அரசாங்கம் ஜெர்மனியின் முழு அடிமையாக ஹிட்லர் சொன்னதை எல்லாம் செய்துகொண்டு வருவதை அமெரிக்கா கவனித்து வருகிறது.

ஹிட்லரும், விஷியின் முதல் மந்திரியான மார்ஷல் பீத்தானும் சீக்கிரத்தில் சந்திக்கப் போகிறார்கள். டூனிஸ், அல்ஜீரியா, மொராக்கோ என்ற பிரெஞ்சுப் பிரதேசங்களை ஹிட்லர் தனக்குக் கொடுக்கும்படி கேட்கலாம் என்று தெரிகிறது. ஏனென்றால், லிபியாவில் தோல்வியடைந்துவரும் ஜெர்மன் துருப்புகளுக்கு 'சப்ளை' சாமான்கள் இந்தப் பிரதேசங்களிலிருந்து அனுப்பலாம்; லிபியாவில் நிலைமை மோசமானால், இந்தப் பிரதேங்களுக்கு ஜெர்மானியர்கள் வந்து விடலாம். இப்பிரதேசங்கள் ஜெர்மனியின் கையில் சிக்கினால், ஜிப்ரால்டருக்கு கிழக்கிலும் மேற்கிலும் உள்ள பிரிட்டிஷ் கடற்போக்கு வரத்துக்குத் தடை ஏற்படும்.

ஆனால் பிரெஞ்சு ஆப்பிரிக்கா இப்போது இரண்டு பிரிவாய் இருக்கிறது. ஒன்று விஷியின் ஆதிக்கத்தின் கீழிருப்பது. மற்றொன்று, சுதந்தர பிரெஞ்சு துருப்புகளின் ஆதிக்கத்தின் கீழிருப்பது. சுதந்தர பிரெஞ்சுத் துருப்புகள் ஜெர்மனிக்கு விரோதமாகப் போராடும். சுதந்தர பிரெஞ்சு துறைமுகங்களுக்கு அமெரிக்க உதவி சுலபமாகவரும். சுதந்தர பிரெஞ்சுத் தலைவராகிய ஜெனரல் டி காலின் அரசாங்கத்தை அமெரிக்கா அங்கீகாரம் செய்திருக்கிறது. ஆகையால் அமெரிக்காவின் குத்தகை கடன் சட்டம் இதற்கும் உபயோகப்படுத்தப்படும்.

# ஹிட்லரின் மகாநாட்டு நாடகம்

## சீக்கிரத்தில் நடத்த யோசனை.

ஹிட்லர் டிசம்பர் மாதத்திலாவது, அல்லது ஜனவரி மாதத்திலாவது ஐரோப்பிய நாடுகளின் மகாநாடு கூட்டப்போவதாகத் தெரிகிறது. இதற்கு அச்சு நாட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளும், சில நடுநிலைமை நாடுகளும், அழைக்கப்படுமாம். இந்த மகாநாடு ஜெர்மனியின் தற்போதுள்ள பலக் குறைவைக் காட்டுகிறது. இந்த வதந்தியை ஜெர்மனி மறுத்திருக்கிறது. ஆனால் நெருப்பில்லாமல் புகையுமா? முதலில், மாஸ்கோவைப் பிடித்துவிட்டு அந்த இடத்தில் இந்த மகாநாட்டை நடத்துவதாக ஏற்பாடாயிருந்தது. மாஸ்கோவை இன்னும் பிடிக்கவில்லை.

இந்த மகாநாடு கூட்டப்போவதன் காரணமென்ன? ஜெர்மனியில் உள்ள பொது மக்களையும், ஜெர்மன் துருப்புகளையும் தைரியப்படுத்துவதற்கும், ஜப்பானை யுத்தத்தில் இறங்கும்படி தூண்டுதவற்கும், இது உபயோகப்படும் என்பது ஹிட்லரின் நினைப்பு. ஆனால் இந்த மகாநாடு நடத்துவதற்கு சிறிது காலம் பிடிக்குமென்று தெரிகிறது. உள்ள நிலைமையைத் தீர ஆலோசித்தபிறகுதான், இந்த மகாநாடு நாடகம் ஹிட்லரால் ஆரம்பிக்கப்படும்.

# ரசாயனப் பொருள்கள் உற்பத்தி

## இந்தியாவின் முயற்சி

இந்தியாவில் ரசாயனப் பொருள்கள் பல இப்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. "சோடா ஆஷ்," "சிந்தெடிக் அம்மோனியா," "காஸ்டிக் சோடா," "குளோரைன்," "பைக்ரோமாட்ஸ்" முதலிய ரசாயனப் பொருள்கள் செய்வதற்கு ஆரம்ப வேலை செய்யப்பட்டிருக்கிறது. ரிஷ்ரா, கேவ்ரா, போர்ட்ஓகா என்ற இடங்களில் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.


ஒரு நாளைக்கு 10 டன் 'சல்பியூரிக் ஆசிட்' என்ற கந்தக திராவகம் உண்டாக்கும்படியான யந்திர சாலை பம்பாயில் ஏற்படுத்தப் போகிறார்கள். "அசிடிக் ஆசிட்" என்ற திராவகம் இதற்குமுன் ஒரு வருஷத்தில் 300 டன் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டது. "பைக்ரோமேட்ஸ்" என்ற ரசாயனப் பொருள் வருஷத்தில் 1,000 டன் இறக்குமதியாயிற்று. ஆமதாபாத்துக்கு அருகிலிருக்கும் ஒரு தொழிற்சாலையில் இப்போது 300 டன் 'அசிடிக் ஆசிட்' திராவகம் ஒரு வருஷத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. மைசூரிலிருந்து அனுப்பப்படும் 'அசிடேட்' என்ற ஒருவகை உப்பிலிருந்து இந்தத் திராவகம் தயார் செய்யப்படுகிறது.

'சல்பூரிக் ஆசிட்' என்ற திராவகம் டாடாஸ் என்ற பிரபல கம்பெனியாராலும், அஸ்ஸாமில் உள்ள டிக்பாய் கம்பெனியாராலும், மைசூரில் உள்ள கெமிகல் அண்டு பர்டிலைசர் தொழிற்சாலையிலும், தயார் செய்யப்படுகிறது.

'பிரைட்டிஸ்' என்ற இரும்பு, செம்பு கனி தென்னிந்தியாவில் அகப்படுகிறது. அதை தென்னிந்திய தொழிற்சாலைகள் உபயோகப்படுத்துகின்றன.

ரசாயனப் பொருள்கள் மூலமாகத்தான், உணவு, துணி, மருந்து வகைகள், வெடிகுண்டு மருந்து முதலியன தயார் செய்யப்படுகின்றன. ரசாயனப் பொருள் உற்பத்தியில் இந்தியா முன்னேறி வருவது மகிழ்ச்சிக்குரிய காரியம்.

## பிரிட்டனுடைய புதிய யுத்தக் கப்பல்



**பிரிட்டனுடைய கப்பற்படைக்குச் சமீபத்தில் சேர்க்கப்பட்டது மேலே காட்டப்பட்ட "பிரின்ஸ் ஆப் வேல்ஸ்" என்ற யுத்தக்கப்பலாகும். இது ஜெர்மனியின் பெருமை பொருந்திய கப்பலான "பிஸ்மார்க்" முழுகடிக்கப்பட்ட சண்டையில் போர் புரிந்தது. கப்பல் மேடையிலிருந்து ஒரு போர் விமானம் வெளியில் அனுப்பப்படுவதை இப்படத்தில் காணலாம்.**

---

# வாரச் செய்திக் குறிப்புகள்

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் விமானப்போர்

சென்றவாரம், ஜெர்மனியில் சில இடங்கள் மேல் பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப்போட்டன. பிரான்சிலுள்ள ஜெர்மன் விமானத்தளங்கள் தாக்கப்பட்டன. பிரெஸ்ட், சேர்போர்க், லோரியண்ட், டங்கர்க் முதலிய இடங்கள்மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன.

பிரிட்டனின் தென்மேற்கு கரைப்பிரதேசத்திலும், கிழக்கு ஆங்கிளியாவிலும் ஜெர்மன் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன.

### 2, ஆப்ரிக்காவும், மத்தியதரைக் கடலும்

வடக்கு ஆப்ரிக்காவில், லிபியாவில், ஒரு பெரிய சண்டை நடக்கிறது. பிரிட்டிஷார் எதிரிகளை முறியடித்து சில முக்கியமான இடங்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள். இந்திய துருப்புகள் சிடி ஓமரைப்பிடித்துக் கொண்டன. லிபியாவில் நடக்கும் யுத்தத்தைப்பற்றிய சில குறிப்புகள் இந்த இதழில் வேறொரு கட்டுரையில் காணலாம். ஜெர்மானியர்கள் எகிப்து எல்லைக்குத் தப்பியோட முயற்சித்தது தடுக்கப்பட்டது.

ரஷ்ய எல்லையிலிருந்து எவ்வளவு துருப்புகள், துப்பாக்கிகள், டாங்கிகள், விமானங்கள் அனுப்பமுடியுமோ, அவ்வளவையும் அச்சு நாட்டினர், அவசர அவசரமாக, லிபியாவுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இத்தாலிக்கு பிரென்னர் கணவாய் வழியாக வரும் ஒவ்வொரு வண்டியிலும் துருப்புகள் வந்து இறங்கியவண்ணமாயிருக்கின்றன. இந்த விஷயம் கெய்ரோவுக்குச் சமீபத்தில் வந்த ஒரு ஸ்விட்ஜர்லாந்து தேசவாசியால் கூறப்பட்டது. இத்தாலியின் துறைமுகமாகிய நேப்பிள்ஸில் கூட்டம் அதிகமாயிருக்கிறது.

மத்திய கிழக்குப் பிரதேசத்தில் தங்களுக்குள்ள ராணுவங்களை பலப்படுத்த இரண்டு கக்ஷியினரும் முயற்சி செய்து கொண்டுவருகிறார்கள். இந்த முயற்சியில் பிரிட்டிஷார்தான் வெற்றி பெற்றுவருகிறார்கள். பார்டியாவிலிருந்து டூனிஸ் எல்லைவரை, வடக்கு ஆப்பிரிக்கக் கடற்கரைக்கு மேலே, போலந்து வாசிகளாலும், தென் ஆப்பிரிக்கர்களாலும், பிரிட்டிஷாராலும் ஓட்டப்பட்ட அமெரிக்க வெடி விமானங்கள் இரவு பகலாகப் பறந்த வண்ணமாகவே இருக்கின்றன. அவை எதிரியின் எண்ணெய் கிடங்குகள், கப்பல்கள், ஆகிய இவற்றின்மீது வெடிகுண்டுகளைப் போட்டுக்கொண்டிருக்கின்றன. அச்சு நாடுகள் திரி

போலிக்கு ஆகாயப் படை அதிகமாக அனுப்பினாலும் இத்தாலியிலிருந்து எண்ணெய் கிடைக்காத பட்சத்தில் யாதொரு பிரயோஜனமுமில்லை.

இந்த இரண்டு மாதங்களாக எதிரி விமானங்கள் தாக்காததிலிருந்து, கிடைக்கக்கூடிய பெட்ரோலை எல்லாம் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. பிரிட்டிஷ் விமானங்கள், நீர் மூழ்கிகள் முதலியன மத்தியதரைக் கடல் பிரதேசத்தில் எதிரிகளைத் தாக்கி வருகின்றன. இத்தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடந்துகொண்டிருக்கின்றன.

## 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்

அமெரிக்கக் கப்பல், "ரூபன் ஜேம்ஸ்" முழுகடிக்கப்பட்டதனால் ஏற்பட்ட நஷ்டத்தைப்பற்றிய விவரங்கள் வெளியிடப்பட்டன. 100 பேர் உயிரிழந்தார்கள். 45 பேர் தப்புவிக்கப்பட்டார்கள்.

அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் நடந்த பேச்சுகளைப்பற்றி மற்ற நேச நாடுகளுக்கு அறிவிக்க ஒரு மகாநாடு கூட்டப்படும் என்று தெரிகிறது.

## 4. ரஷ்யாவும், பின்லாந்தும்

ராஸ்டோப், லெனின்கிராட் பகுதியில், ரஷ்யத் துருப்புகள் ஜெர்மானியர்களை எதிர்த்துத் தாக்குகின்றன. வடக்கில் முன்னும் பின்னும் ரஷ்யர்கள் எதிரிகளைத் தாக்கினார்கள். திக்வின் என்ற இடத்தில் தெருக்களில் சண்டை நடக்கிறது. மாஸ்கோவை குறடா முனையால் பிடிப்பதுபோல செய்த முயற்சி, ஜெர்மானியர்களுக்கு பயன்படவில்லை. தூலா என்ற பட்டணத்தைப் பிடிக்க ஜெர்மானியர்கள் முயலுகிறார்கள். தெற்குப் பகுதியில் ரஷ்யர்கள் முன்னேறிப் போர் புரிகிறார்கள்.

### கடுமையான போர்

ரஷ்யப்போர்முனையில், யுத்தம் கடுமையாக நடந்துகொண்டு வருகிறது. வடக்கில், லெனின்கிராட் பகுதியில், ஒரு பாகத்தில் ஜெர்மன் துருப்புகள் பின்னோக்கி ஓடிவிட்டன. 3,000 ஜெர்மானியர்கள் அடங்கிய இரண்டு ஜெர்மன் பட்டாளங்கள் அடியோடு நாசமாக்கப்பட்டன. வால்கோப் பகுதியில் பல மைல்கள் தூரம் ஜெர்மானியர்கள் துரத்தியடிக்கப்பட்டார்கள். மலேயா விஷிரா என்ற இடத்தை ரஷ்யர்கள் பிடித்துவிட்டார்கள். பல முக்கியமான இடங்களை ஜெர்மானியர்களிடமிருந்து ரஷ்யர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள்.

மாஸ்கோ பகுதியில், இரவு பகலாக, சண்டை நடக்கிறது. சென்ற மாதம், அதாவது அக்டோபரில், அனுப்பிய துருப்புகளைவிட அதிகமான துருப்புகளை ஜெர்மனி அனுப்பியிருக்கிறது. எவ்வளவு சேதமானாலும் சரி ரஷ்யாவின் தலை நகராகிய மாஸ்கோவைப் பிடித்துவிடவேண்டும் என்று ஜெர்மானியர்கள் கடும் பிரயத்தனம் செய்கிறார்கள். ஆனால் ரஷ்யர்கள் தங்களுடைய பாதுகாப்புகளை பலப்படுத்திக்கொண்டார்கள். நிலைமை நெருக்கடியாக இருக்கிறதென்று, "இஸ்வெஸ்டியா" என்ற ரஷ்யப் பத்திரிகை கூறுகிறது. மாஸ்கோ பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் ஜெர்மானியர்கள் முன்னேற்றத்தைத் தடுத்து அவர்களைப் பின்தள்ளவேண்டும் என்று அப்பத்திரிகை கூறுகிறது.

### பின்லாந்தின் முடிவு

தூலா பகுதியில் கடுமையான யுத்தம் நடக்கிறது. தென்கிழக்கிலிருந்து, இப்பட்டணத்தைப் பிடிப்பதற்கு ஜெர்மானியர்கள் முயற்சி செய்கிறார்கள். இங்குள்ள ஒரு ஆற்றைக் கடப்பதற்கு ஆறு தடவை பாலம் கட்டினார்கள். ஆறு தடவையும் பாலம் நாசமாக்கப்பட்டது.

பின்லாந்து, ஜெர்மனியின் கட்டளையின்படி, பொதுவுடைமைக் கொள்கைக்கு எதிரான "ஆண்ட்டி—காமிண்டர்ன் பாக்ட்" என்ற ஒப்பந்தத்தில கையெழுத்திடத் தீர்மானித்திருக்கிறதாகத் தெரிகிறது.

### குளிர்காலக் கஷ்டங்கள்

ரஷ்யப் போர்முனையில் சில பகுதிகளில் ஜெர்மன் முன்னேற்றத்தின் வேகம் தடைப்படுத்தப்பட்டது. சீதோஷ்ண நிலை இதற்கு ஒரு காரணம். ஜெர்மன் போக்குவரத்துகளுக்குக் கஷ்டங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. குளிர்காலத்துக்காக அதிகப்படியான தேவைகள் வேண்டியதாயிருக்கிறது. ரஷ்யக்குரங்குப்படைகளின் சேஷ்டைகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. குளிர்காலம் அவைகளின் நடவடிக்கைகளைப் பாதிக்க முடியாது. ஜெர்மானியர் தங்கள் 'பான்ஸர்' படைகளை சிறு சிறு பகுதிகளாக வகுத்து, அவற்றை காலாட்படையுடன் சேர்ந்து போரிடும் படி உத்தரவிட்டிருக்கிறார்களாம். இது உண்மையானால் பருவ நிலையை உத்தேசித்தும், வண்டிகளுக்கு ஏற்படும் சேதத்தை உத்தேசித்தும், பான்ஸர் படைகளைக்கொண்டு ஊடுருவிச்செல்வது கடினம் என்று ஜெர்மானியர் உணர்ந்துகொண்டுவிட்டார்கள் என்று தெரிகிறது. சாதாரணமாக காலாட் படைகளுடன் சேர்ந்து வேலை செய்யும் டாங்கிகளுக்கும் அதிக சேதம் ஏற்பட்டுவிட்டதுபோல் தோன்றுகிறது. குளிர்காலத்தால் ரஷ்யருக்கும் கஷ்டம் ஏற்பட்டிருக்கத்தான்வேண்டும். ஆனால் அதைவிட அநேக மடங்கு கஷ்டங்களை ஜெர்மானியர்கள் அனுபவிக்கிறார்கள்.

யூக்ரேனிய முனையில், மார்ஷல் டிமோஷெங்கோ நிலைமையை ஒழுங்குபடுத்திக்கொண்டு வருகிறார். ஆனால் இங்கேயாவது, அல்லது மாஸ்கோ முனையிலாவது, ஜெர்மன் முன்னேற்றம் ஒரேயடியாகத் தடைப்பட்டுவிட்டது என்று நினைப்பது தவறு. சீதோஷ்ண நிலை மாறும் பட்சத்தில் ஜெர்மானியர் திரும்பவும் தாக்க ஆரம்பிக்கலாம். ஆனால் முன்போல அவ்வளவு வேகத்துடன் முன்னேற முடியாது.

### ஜெர்மானியர்களின் ஏற்பாடு

ரஷ்யாவையும் பெருவாரியாகத் தாக்குவதாகக் காட்டிக் கொண்டு, ஜெர்மானியர்கள் தங்களுடைய பட்டாளங்களை, சீர்வகுத்து, ஒழுங்கு படுத்த வேண்டுமென்பது ஜெர்மன் ராணுவத் தலைவர்களின் நோக்கமாயிருக்கிறது. அநேக சிப்பாய்களை ஜெர்மன் யுத்தத் தொழிற் சாலைகளுக்கு வேலை செய்வதற்காக அனுப்பப் போகிறார்கள் என்று தெரிகிறது.

பட்டாள ஒழுங்கெல்லாம் ஆன பிறகு முன் அணியில் இருக்கும் துருப்புகளைச் சற்று பின்னுக்குத் தள்ளி நிறுத்தி வைக்கப் போகிறார்கள். குளிர்காலத்தில் அவர்கள் வசிப்பதற்கு இடவசதி செய்து கொடுப்பதற்காகவும், முன் அணியில் இருக்கும் தொழிலாளர்களை கூடுமானவரைத் திருப்பியனுப்புவதற்காகவும் இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

ரஷ்யர்கள் நெருப்புக்கு இரையாக்கிய பிரதேசங்களில் குளிர்காலத்தில் இருக்க இடம் கிடைப்பது கஷ்டம். ஆகவே மாஸ்கோவுக்கு மேற்கே வெகு தூரத்துக்குப் போனால்தான் குளிர்காலத்தை அதிக கஷ்டமில்லாமல் கழிக்கலாம்.

ஜெர்மானியர் பின்னுக்குத் தள்ளி வராவிட்டால் தொழில் வேலை செய்யக்கூடியவர்கள் எல்லோரும் பாதுகாப்பு வேலையில் வைக்கும்படியாக ஏற்படும்.

### ரஷ்யாவுக்கு புதிய மார்க்கம்

ரஷ்யாவோடு மற்றுமொரு தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. மத்தியக் கிழக்குத் திசையில் ஒரு புதிய விமான மார்க்கம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. நாளுக்கு நாள் வளர்ந்து வரும் பிரிட்டிஷ் விமான பலத்தையும் அமெரிக்க விமான பலத்தையும் வலியுறுத்தக் கூடிய வகையில் கெய்ரோவுக்கும் டெஹிரானுக்குமிடையில் புதிய விமான போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ரஷ்யாவோடு இன்னொரு தொடர்பை ஏற்படுத்துவதற்காகவும் மற்ற நாடுகளுக்கிடையில் போக்குவரத்தைத் துரிதப்படுத்துவதற்காகவும் இந்தப் புதிய மார்க்கம் திறக்கப்பட்டிருக்கிறது. விமானங்கள் பாக்தாதிலிருந்து டெஹிரானுக்கு மூன்று மணிக்குக் குறைந்த நேரத்தில் பறந்து செல்கின்றன. இதனால் மூன்று நாள் மிகவும் பிரயாசப்பட்டுச் சாலை வழியே பிரயாணம் செய்யவேண்டிய கஷ்டம் இல்லாமற் போகிறது. கெய்ரோவிலிருந்து பாக்தாதுக்குப் போகவும், அங்கிருந்து கெய்ரோவுக்குத் திரும்பவும், சுமார் நான்கு மணி நேரமாவதால், முன்போல் பாலை வனத்திலே மூன்று நாள் பிரயாணம் செய்யவேண்டியதில்லை. ஆரம்பத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் வாரத்துக்கொருதடவைதான் விமானம் போகும். ஆனால் சில நாளுக்குப்பிறகு இன்னும் அடிக்கடி போய்க்கொண்டிருக்கும் என்று தெரிகிறது.

### ரஷ்யப்பெண்மணிகள் சேவை.

இப்போது ரஷ்யாவில் உள்ள தொழிற்சாலைகளிலும், காரியாலயங்களிலும், பண்ணைகளிலும், மூன்று கோடி பெண்கள் வேலைசெய்து வருகிறார்கள். அவர்கள் யந்திரங்களை ஓட்டுபவர்களாகவும், காரியதரிசிகளாகவும், விவசாயத் தொழிலாளர்களாக

வும் வேலை செய்கிறார்கள். இதல்லாமல் பொறுப்பு மிக்க நிர்வாக அதிகாரிகளாகவுங்கூட வேலைபார்த்து வருகிறார்கள். தொழிற்சாலையில் வேலைசெய்யும் ஒரு தொழிலாளப்பெண் தொழிற்சாலை மானேஜராகி ஒரு பெரிய தொழிலாளப் பட்டாளத்தின் தலைமைப்பதவியை அடையலாம். வயது முதிர்ந்த கிழவிகளெல்லாம் பெரிய பெரிய கூட்டுப் பண்ணைகளை நிர்வகித்து வருகிறார்கள். தொழிற்சாலைகளும், தளவாடங்களும், எதிரி கையில் சிக்கிவிடும்போலிருக்கும் சமயத்தில், உத்தரவுப்படி அவைகளை அழித்து வருபவர்கள் இந்தப் பெண்மணிகள்தான்.

## பெண்களுக்குப் பறக்கும் பயிற்சி

ரஷ்யப்பெண்கள் தங்கள் நாட்டையும் வீட்டையும் காப்பதற்காக இவ்வளவு அருமையான உதவி செய்து வருவதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. இவ்வளவும் சரியான முன்னேற்பாட்டின்படிதான் நடந்து வருகிறது. இந்த முன்னேற்பாட்டை, பெண்கள்தான் செய்தார்கள். உள்நாட்டு அரசாங்கத்தைச்சேர்ந்த பெண்கள் 5 லட்சம் பேரும், ரஷ்யாவின் தலைமை அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் 277 பேரும் சேர்ந்து தான் இதைச் சாதித்திருக்கிறார்கள். யுத்தம் தொடங்குவதற்கு முன்னமே பல்லாயிரக் கணக்கான ரஷ்யப்பெண்கள் பறக்கக் கற்றுக் கொண்டார். பட்டாளத்தோடுகூடவே பெண்களும் விமானப்போராட்டம், ரசாயனப்போராட்டம், சமுதாயத் தற்காப்பு முதலியவற்றில் ஒழுங்காகப் பயிற்சி பெற்றுவந்தார்கள். இதில், நகரத்து பெண்களைப் போலவே கிராமாந்தரப்பெண்களும் நல்ல திறமையடைந்தார்கள். இத்தகைய பயிற்சிகளால் மாஸ்கோவில் மிகவும் நல்ல பலன் கிடைத்திருக்கிறது. அங்கே விமானத்தாக்குதல் பாதுகாப்பு சம்பந்தமான பெண் வார்டன்கள் எத்தனையோ கட்டடங்களைக் காப்பாற்றுகிறார்கள்.

## முன்னணிவேலை

ரஷ்யப்பெண்கள், நிலத்திலும் சரி, ஆகாயத்திலும் சரி, போரிடும் படைகளில் சேரக்கூடாதென்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமன்றி, அடுத்த தலைமுறையின் தேகாரோக்கியத்தைப் பாதிக்கக்கூடிய உடலுழைப்பிலும், தொழில்களிலுங்கூட அவர்கள் ஈடுபடக்கூடாது. இது தவிர மற்றபடி அவர்கள் பூரணமாய் பங்கெடுத்துக்கொள்ளாத சேவையோ, தொழிலோ, கிடையவே கிடையாது. துருப்புகளுக்கு வேண்டிய டாக்டர்களாகவும், இஞ்சினியர்களாகவும், சப்ளை கோஷ்டியினராகவும், எவ்வளவோ பெண்கள் வேலைசெய்து வருகிறார்கள். அவர்கள் வியாபாரக் கப்பல்களில் சிப்பந்திகளாக யிருக்கிறார்கள். ஆம்புலன்ஸ் விமானங்களும், பிரயாண விமானங்களும் ஓட்டுகிறார்கள். மற்றவர்களுக்கு இவ்விஷயங்களைப் போதிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். குறிபார்த்துச் சுடுவதில் அவர்களுக்குள்ள பயிற்சியினால் அவர்கள் சிறந்த 'கொரில்லா'ப் படையினராக உதவுகிறார்கள். ரஷ்யப் பெண்மணிகள் இம்மாதிரியாக பாதுகாப்பின் முன்னணியில் நிற்கிறார்கள்.

## ஜெர்மன் மந்திரி நியமனம்

கைப்பற்றப்பட்ட ரஷ்யப் பிரதேசத்துக்கு ஜெர்மனியின் மந்திரியாக ஆல்பிரெட் ரோஸன்பர்க்கை ஹிட்லர் நியமித்திருக்கிறார். இந்தப் பிரதேசத்தில் ஜெர்மன் ஆட்சியை ஏற்படுத்தி, நிர்வாகம் நடத்த வேண்டிய பொறுப்பு அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மனி, ரஷ்யாவுடன் கொஞ்ச காலத்துக்குப் போலி நட்பு செய்துகொண்டபோது, ரோஸன்பர்க்கின் பெயர் மறைந்திருந்தது. ரிப்பன்டிராப் முன்னுக்குப் போனால், இவர் பின்னுக்குப் போய்க்கொண்டிருந்தார். ஆனால் இப்போது ரிப்பன்டிராப் ஹிட்லரின் மேற்குப் பிரதேச நிபுணர் ஆய்விட்டார்; ரோஸன்பர்க் கிழக்குப் பிரதேச நிபுணராக இருக்கிறார்.

ரஷ்யா என்றால் ரோஸன்பர்க்குக்கு மிகுந்த வெறுப்பு. ஆகவே அவர் மிக்க கொரேமான ஆட்சி நடத்துவார் என்பதில் சந்தேகமில்லை. பழைய ரஷ்ய அரசர்காலத்தில் ரஷ்யாவின் ரகசிய ஏஜென்டாக இவர் வேலை பார்த்தார் என்று சொல்லப்படுகிறது.

ரோஸன்பர்க் வெகு காலமாகவே ஹிட்லரின் கூட்டாளியாயிருக்கிறார். 1923-ம் வருஷத்தில் மூனிக் கலகத்தில் ஹிட்லரின் நம்பிக்கையாளரான ஷூப்னர் ரிக்டர் கொல்லப்பட்டார். இதற்குப் பின் ஹிட்லர் ரோஸன்பர்க்மீது நம்பிக்கை வைக்கத் தொடங்கினார். ரோஸன்பர்க் சீக்கிரத்தில் "வால்கிஷர் பெயபாக்டர்" என்னும் பத்திரிகைக்கு ஆசிரியரானார். நாஜிக் கொள்கையைப்பற்றி பிரசாரம் செய்யத் தொடங்கினார். கிறிஸ்தவ தர்மத்துக்கு விரோதமான நாஜிக்கோட்பாடுகளை ஹிட்லருடன் சேர்ந்து ஏற்படுத்தியவர் இவர்தான்.

கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் ரோஸன்பர்க்குக்கு அநேக எதிரிகள் இருக்கிறார்கள். அவருடைய கொள்கைகள் ஜெர்மன் சேனைத் தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை. முதலாளித் தத்துவத்தின்மீது அவர் கொண்டிருந்த வெறுப்பு ஜெர்மன் ராணுவத் தலைவர், கோயரிங்குக்குப் பிடிக்கவில்லை. ஹிட்லரின் ஆதரவைச் சம்பாதிப்பதில் தமக்குப் போட்டியாக வந்துவிட்டாரே என்று ஹிட்லரின் பிரசார மந்திரி, கோப்பல்சுக்கு அவர்மேல் வெறுப்பு.

## 5. பால்கன்ஸ், துருக்கி முதலியன

துருக்கிக் கப்பல்கள் கருங்கடலில் செல்லலாகாதென்று துருக்கி அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. கருங்கடலில், பல்கேரியாவுக்கு அருகில், சப்மரீன்களால் துருக்கிக் கப்பல்கள் தாக்கப்பட்டதுதான் இதற்குக் காரணம்.

## மந்திரிகள் ராஜிநாமா

துருக்கியின் முதல் மந்திரி, மிஸ்டர் ரபீக் ஸைடம், ஒரு மாத ரஜா எடுத்துக்கொண்டதும், தற்காப்பு மந்திரியும், போக்குவரத்து மந்திரியும், தம் பதவிகளை ராஜிநாமா செய்துவிட்டதும், பல வதந்திகளை உண்டாக்கியிருக்கின்றன. ஆனால் இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் சாதாரணமான காரணங்களால் தான் நிகழ்ந்திருக்கின்றன. முதல் மந்திரி அரசாங்க பளுவு தாங்காமல் சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டதில் ஒன்றும் ஆச்சரியமில்லை; உண்மையில் அவர் இவ்வளவு நாள் சமாளித்துக்கொண்டு வந்ததுதான் ஆச்சரியம். மிஸ்டர் ஸைடம், தலைவர் இனுனுவின் பூரண நம்பிக்கைக்கும் நட்புக்கும் பாத்திரராக இருந்து வருகிறார். ஒருமாத ஓய்வுக்குப் பிறகு அவர் மீண்டும் பதவியை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையிலிருப்பார் என்று உயர்ந்த அதிகார வட்டாரங்களில் கருதப்படுகிறது. அவர் ஓய்விலிருக்கும் காலத்தில், அயல் நாட்டு மந்திரி, மிஸ்டர் செராஜோக்லு முதல் மந்திரிவேலை பார்த்துவருவார். தற்சமயம் சர்வதேச விவகாரங்களில் நிபுணரான ஒருவரை முதல் ஸ்தானத்தில் வைத்திருப்பது எவ்வளவு அவசியமென்று அறிந்திருப்பதையே இது காட்டுகிறது.

## "ரீபா" சம்பவத்தின் எதிரொலி.

தற்காப்பு மந்திரியும் போக்குவரத்து மந்திரியும் ராஜிநாமாசெய்தது ரீபா என்னும் துருக்கியக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதன் பலன்தான். சென்ற ஜூன் மாதக் கடைசியில் துருக்கிக்காகக் கிரேட் பிரிட்டன் கட்டிய போர்க் கப்பல்களைக் கொண்டு வருவதற்காக எகிப்துக்குச் செல்லும் வழியில் சைப்ரசுக் கருகில் இந்தக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. இதனால் துருக்கியக் கடற்படையைச் சேர்ந்த அதிகாரிகளும், தேர்ந்த சிப்பந்திகளும் பலபேர் மாண்டுபோயினர். ஆபத்தான கடற் பிரதேசத்தில், புராதனமான வியாபாரக் கப்பலில் ஆபத்தில் காப்பாற்றுவதற்கான உபகரணங்கள் போதிய அளவு இல்லாமல் அவர்களைப் போகவிட்டதற்காக, இந்த மந்திரிகள் கடுமையாய்க் கண்டனம் செய்யப்பட்டார்கள். இதுவிஷயமாய் ஆரம்பித்த விசாரணை முடியுந்தறுவாயில், நடவடிக்கைகளுக்குத் தடங்கல் ஏற்படக்கூடாதென்பதற்காக இந்த மந்திரிகள் ராஜிநாமா செய்துவிட்டார்கள்.

## பல்கேரியாவின் குறும்பு

சில நாள்களாக இங்கு அரசியல் வானத்தில் ஏற்பட்டிருந்த அமைதியை பல்கேரியாவிலிருந்து வரும் செய்திகள் குலைத்துவிட்டன. இதற்குமுன் யுகோஸ்லாவியாவிலும் க்ரீஸிலும் இருந்த பிரதேசங்கள் இப்போது தனக்குச் சொந்தமாயிருப்பதால் தனது தற்போதைய எல்லைகளைப்பற்றி பல்கேரியா திருப்தியுற்றிருப்பதாகவும், ஆயினும் துருக்கியின் எல்லைகளுக்கு அடுத்தாற்போலவே பிரிட்டிஷ் ரஷ்யச் சைன்யங்கள் இருப்பதாகவும், பல்கேரிய அயல்நாட்டுக் கமிட்டித்தலைவர் கூறினார். துருக்கியில் ஏற்பட்ட மந்திரிசபை மாறுதல்களுக்கு அரசியல் விஷயங்கள் காரணமாயிருக்கலாமென்றும் கூறினார்.

இந்தப் பிரசங்கத்தை யடுத்து பல்கேரிய யுத்த மந்திரியும் ஒரு பிரசங்கம் செய்தார். பல்கேரியப்பட்டாளம் சிறியதுதான் என்றாலும் அவசியமாயின் எதற்கும் அது தயார் என்று அவர் கூறினார்.

### பத்திரிகைகள் பரிகாசம்

இவ்விரண்டு பேச்சுகளும் துருக்கியருக்குக் கொஞ்சம் எரிச்சலையுண்டாக்கியிருக்கின்றன. பொறுப்பு வாய்ந்த பல்கேரிய அரசியல் வாதிகள் யாரும் தங்கள் ஜெர்மன் எஜமானர்கள் அங்கீகரித்தால், அல்லது தாங்களே சொல்லிக் கொடுத்தாலொழிய எதையும் சொல்லத் துணியமாட்டார்கள் என்று துருக்கியர்களுக்குத் தெரிந்திருப்பதால் இந்த எரிச்சல் பின்னும் அதிகமாயிருக்கிறது. பல துருக்கியப் பத்திரிகைகள் இந்த விஷயத்தைப்பற்றி எழுதியிருக்கின்றன. துருக்கியின் எல்லைக்கு "அப்பால்" பிரிட்டிஷ், ரஷ்யச் சைன்யங்கள் இருப்பதால் ஒன்றும் முழுகிப் போய்விடாது; பல்கேரியாவுக்கு "உள்ளேயே" அந்நியப்படைகள் இருக்கின்றனவே அதற்கென்ன சொல்வது, என்று அப்பத்திரிகைகள் கேட்கின்றன.

## 6. கப்பல் நிலைமை

மத்தியதரைக் கடலில், இரண்டு எதிரிக்கப்பல்கள் முழுகடிக்கப்பட்டன. அவைகளைப் பாதுகாத்துவந்த எதிரி நாசகாரிக் கப்பல்கள் தப்பி ஓடிவிட்டன.

மத்தியதரைக்கடல் மத்தியில் ஒரு எதிரி யுத்தக் கப்பலும், இரண்டு சாதாரண கப்பல்களும் பிரிட்டிஷ் நீர் வெடிகுண்டினுல் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டன.

## 7. தூரக் கிழக்கு அரங்கம்

சீனுவின் தலைவரான சீயாங்கேஷேக் நேசநாடுகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இந்த மழைக் காலத்தில் ஜப்பானை அடித்து நொறுக்கிவிடும்படி அவைகளைக் கேட்டிருக்கிறார். 2,000 ஜப்பானியர்கள் டச்சுக்கிழக்கிந்திய தீவைவிட்டு நீங்கி ஜப்பானுக்குக் கப்பலில் பயணமானார்கள். ஜப்பானில் உள்ள அமெரிக்கர்கள் நாட்டைவிட்டு போய்விடும்படி அமெரிக்க ஸ்தானிகர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

### மிஸ்டர் குருசுவின் தூது

ஜப்பானிய விசேஷ தூதரான மிஸ்டர் சபுரோ குருசு வாஷிங்டனில் ஒப்பந்தப் பேச்சு பேசிக்கொண்டிருக்கிறார். தூரக் கிழக்கு பிரதேசத்தில் சீக்கிரமாக நிலைமை மாறலாம் என்பதைப்பற்றி பிரிட்டனிலும் அமெரிக்காவிலும், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலும் சந்தேகம் கிடையாது. ஜப்பானில்கூடச் சந்தேகம் இருக்காது என்று சொல்லலாம். தூரக் கிழக்கு நிலைமையைப்பற்றி பேசும் மிஸ்டர் சபுரோ குருசு அரசியல் தந்திரமும், அனுபவமும் அதிகம் உடையவர். பர்லினில் இருந்த ஜப்பானியத் தூதர் என்கிற முறையில் அவர் சென்ற வருஷம் மூன்று வல்லரசுகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். கடைசி நிமிஷ சமாதானத்துக்கு அமெரிக்காவுக்குப் பிடித்தமான வேறு யாரையாவது அனுப்பியிருக்கலாம். ஜப்பானிய முதல் மந்திரியான ஜெனரல் டோஜோ, ஹிட்லர் கொள்கைகளுடன் அதிகமாகச் சம்பந்தப்பட்ட இவரை அனுப்பியது ஆச்சரியத்தை உண்டாக்கியிருக்கிறது.

இன்னெரு முக்கியமானதும் ஆச்சரியமானதுமான விஷயம் என்னவென்றால், தம் தூதால் ஒரு நன்மையும் விளையப் போவதில்லை என்று மிஸ்டர் குருசு மணிலாவில் பத்திரிகைகளுக்குத் தெரியும்படி தம் நண்பர்களிடம் கூறியிருப்பதுதான். இதைப்போல வதந்திகளைக் கிளப்பிவிடுவது மிஸ்டர் குருசு நாஸியரிடமிருந்து கற்றுக்கொண்ட பாடமென்று சொல்லலாம்.

### இரகசியக் கடிதம்

ஆனால் இந்த மர்மத்துக்கெல்லாம் விளக்கம் மிஸ்டர் குருசு தம்முடைய பையில் வைத்திருக்கும் ஒரு கடிதத்தில் இருக்கிறது. இக்கடிதம் ஜெனரல் டோஜோ, பிரசிடெண்ட் ரூஸ்வெல்டுக்கு எழுதியனுப்பியிருக்கும் ஒரு செய்தியாகும்.

மிஸ்டர் குருசுவின் பேச்சு வார்த்தைகளின் முடிவு என்ன ஆனாலும் சரி, ஜப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்க்கத் தூரக் கிழக்கு தயாராயிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. பசிபிக் பிரதேசத்தைப் பாதுகாப்பது சம்பந்தமாக அமெரிக்கா, பிரிட்டன், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் இம்மூன்றும் சேர்ந்து ஏற்பாடுகள் செய்து முடித்துவிட்டன. அட்லாண்டிக் போரில் அமெரிக்கக் கடற்படை அதிகமாக கலந்துகொண்டிருப்பது ஒரு முக்கியமான விஷயமாகும். இதனுல் பாக்கி யுத்தப் பிரதேசங்களுக்கு பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களை அனுப்ப முடியும். அட்லாண்டிக் போர் விஷயமாக பிரிட்டனுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் அனுகூலமான நிலைமையினுல், பிரிட்டிஷ் கடற்படைக்கு இருந்த நெருக்கடி தளர்ந்திருக்கிறது என்பது எல்லாரும் அறிந்த ஒரு ரகசியம். அன்னியக் கடற் பிரதேசத்தில் ஜப்பானியர் ஆக்கிரமிக்கும் பட்சத்தில் அவர்களை வரவேற்க பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் தயாராக இருக்கும். ஏனென்றுல் தூரக் கிழக்குக்கு ஒரு கடற்படை அனுப்பப்பட்டிருக்கிறது என்று மிஸ்டர் சர்ச்சில் பார்லிமெண்டில் தெரிவித்திருக்கிறார்.

### ஜப்பானின் நோக்கம்

"கிழக்காசியாவிலிருந்து பிரிட்டனையும் அமெரிக்காவையும் வெளியேற்றுவதுதான்" ஜப்பானின் நோக்கமென்று ஜப்பானிய பொக்கிஷ மந்திரி பேசியிருந்தார். இதைப்பற்றி "டோக்கியோவில் சண்டப் பிரசண்டம்" என்ற தலைப்பில், "டெய்லி டெலக்ராப்" பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது :—

ஜப்பான் இந்த முயற்சியில் இறங்காமலிருப்பதே நல்லது என்பதுதான் அமெரிக்காவும், பிரிட்டனும் இதற்குக் கூறும் பதிலாகும். கீழ்க்கோடியில் அமெரிக்காவுக்கு நியாயமான பாத்தியதைகள் எவ்வளவோ இருக்கின்றன. பிரிட்டனுக்கு அங்கு பாத்தியதைகள் மட்டுமன்றிப் பரந்த பிரதேசங்களும் இருக்கின்றன. இவைகளையெல்லாம் விட்டுவிடும்படி ஜப்பான் கேட்பது அதிகப்பிரசங்கித்தனமே தவிர வேறல்ல. பிரிட்டனுடைய பலம் அசைக்க முடியாதபடி இருக்கிறது. சமீபத்தில் எதிர்பாராத விதத்தில் முதல் தரமான கடற்பலம் அதற்கு ஆதரவாய்க் கிடைத்திருக்கிறது. அதைப்பற்றிய ரகசியத்தை மிஸ்டர் சர்ச்சில் சில நாளைக்கு முன்னே வெளியிட்டார்.

"ஜப்பான் ஆக்கிரமிப்பு வேலையை விட்டுவிடுவதாகத் திட்டமான உறுதிமொழி கூறும்படி வாஷிங்டனில் மிஸ்டர் குருசுவிடம் கேட்கப்படும் என்று தெரிகிறது. அவருக்கு எத்தகைய பதில் தரும்படி உத்தரவு கிடைக்கிறதோ, அதைப் பொறுத்துத்தானிருக்கிறது இந்தக் கீழ்க்கோடி பிரச்னை தீருவது. வசைமாரி பொழிவதோ சண்டப்பிரசண்டமாய்ப் பேசுவதோ இதைத் தீர்க்காது."

### போக்கு வரவு சாதனம்

தூரக்கிழக்குப் பிரச்னையில் போக்குவரவு சாதனங்கள் முக்கியமானவை. அவைகளில் சிலவற்றை இங்கே கவனிப்போம் : ரங்கூனிலிருந்து பர்மா-சீன எல்லைக்குச் செல்ல நான்கு வழிகள் இருக்கின்றன. அவையாவன :—

1. லாஷியோ வரையில் ரயிலில் சென்று பிறகு ரோட்டு வழியாகச் செல்லலாம்.
2. மேலே சொன்ன வழியில், லாஷியோ வரையில் ரயிலுக்குப் பதில் ரோட்டு வழியாகவும் செல்லலாம்.
3. பாமோ வரையில் நதி வழியாகச் சென்று, பிறகு ரோட்டு வழியாகச் செல்லலாம்.
4. மாண்டலே அல்லது கதா வரையில் ரயிலில் சென்று, பிறகு பாமோ வரையில் நதியில் சென்று, பிறகு ரோட்டு வழியாகச் செல்லலாம்.

சீனுவிலிருந்து பர்மாவுக்கு வர ஒரே ஒரு நல்ல பாதைதான் இருக்கிறது. அதுதான் பர்மா ரோட்டு என்பது. ஆனால் இப்பொழுது கும்மிங்கிலிருந்து லாஷியோ வரையில் போடப்படும் ரயில்பாதை முடிந்து விட்டால் இந்தப் பாதையும் மிக்க உபயோகமுள்ளதாயிருக்கும். இதைத் தவிர வர்த்தகர்கள் வெகுகாலமாக உபயோகித்துக்கொண்டுவரும் அநேக சிறு பாதைகளும் உள்ளன.

### விமானப்பாதைகள்

ரங்கூனுக்கும், சுங்கிங்குக்கும் நடுவே லாஷியோ வழியாக விமானப்பாதை ஒன்று இருக்கிறது. சீனுவால் நடத்தப்படும் ஒரு பாசஞ்சர் விமானமும் தபால் விமானமும், இரண்டு ஊர்களுக்குமிடையே பறந்துகொண்டிருக்கின்றன. பர்மாரோடு வழியாகச்செல்லும் சரக்குகளைக் கொஞ்சம் லாஷியோவிலிருந்தோ, மிட்கினேவிலிருந்தோ சீனுவரை ஆகாய விமான மூலமாகக் கொண்டுசெல்ல ஒரு யோசனை இருந்துவருகிறது.

பர்மா போக்குவரத்துக்குக் கேந்திரஸ்தானமாக விளங்குவது ரங்கூன்--பர்மா ரயில் பாதை. இது ரங்கூனிலிருந்து 440 மைலுக்கு அப்பால் உள்ள மாண்டலேயுக்கும், இன்னும் அதற்கு அப்பாலும் செல்லுகிறது. மாண்டலேயிலிருந்து 120 மைலுக்கு அப்பால் உள்ள லாஷியோ வரை

யில் போகும் ரயில் பாதையில்தான் சீனுவுக்குப் பெரும்பான்மையான சரக்குகள் செல்லுகின்றன. மாண்டலேயுக்கும் மேமியோவுக்கும் நடுவில் இந்த ரயில் பாதை ஷான் பீட பூமியின் ஒரு செங்குத்தான உச்சியை ஏறவேண்டியிருக்கிறது. இங்கே பதின்மூன்று மைல் தூரத்துக்கு பாதை செங்குத்தாகச் செல்கிறது. வண்டி திரும்பி வளைந்து செல்வதற்காக, வண்டியைத் திருப்பும் யந்திரங்கள் நான்கு ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்டலேயுக்கு அப்பால் அநேக பள்ளத்தாக்குகள் வருவதால், ரயில்பாதை வளைந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஒரு இடத்தில் 2,200 அடி நீளமுள்ள ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு காக்டீக் பாலம் என்று பெயர்.

இந்தப் பாலத்திலிருந்து சீபா வரையில் ஒரே மலைப்பிரதேசம் தான். இங்கிருந்து ரயில் பாதைக் கோடியான லாஷியோவரையில் ரயில் செங்குத்தான பிரதேசம் வழியாகத்தான் செல்ல வேண்டியிருக்கிறது.

### பர்மா—சீனு ரோட்டு

ரங்கூனிலிருந்து லாஷியோ வரையில் ரயில் பாதை செல்லும் மார்க்கமாகவே ஒரு நல்ல மோட்டார் பாதை இருக்கிறது. லாஷியோவிலிருந்து தான் கும்மிங்குக்குச் செல்லும் பர்மா ரோட்டு ஆரம்பிக்கிறது. இந்த ரஸ்தாவின் வழியாக 120 மைல் சென்றதும் பர்மா முடிந்து சீனு ஆரம்பித்து விடுகிறது. இந்த முதல் 120 மைலும் மலைப்பாங்கான பிரதேசம். இருந்தாலும் ரோட்டு மிகவும் நல்ல ஸ்திதியில் வைக்கப்பட்டிருக்கிறது. லாஷியோவிலிருந்து கும்மிங் வரையில் உள்ள தூரம் 738 மைல். இந்த தூரத்தைக் கடப்பதற்கு மோட்டார் வண்டிக்கு சாதாரணமாக ஐந்து தினங்களும், டிரக்குகளுக்கு ஏழு தினங்களும், ஆகிறது.

சீனு எல்லையிலிருந்து யூனன் மாகாணத்தின் தலைநகரான கும்மிங்வரை செல்லும் பர்மா ரோட்டின் சீனப் பகுதி 1938-ம் வருஷம் திறக்கப்பட்டது. இடையில் பூமி சரிவுகளும், ஜப்பானிய விமானத் தாக்குதல்களும் ஏற்பட்டபோது தவிர, பாக்கி சமயமெல்லாம் இந்த ரோட்டு மூடப்படாமல் இருந்திருக்கிறது. வழியில் சால்வின் நதியையும், மேகாங் நதியையும் கடப்பதற்குத் தொங்கு பாலங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. சில இடங்களில் பாதை மிகவும் செங்குத்தாகச் செல்கிறது. குறிப்பாக மேகாங் பள்ளத்தாக்குக்கு அப்பால் பூமி மட்டம் கொஞ்ச தூரத்துக்குள் சமுத்திர மட்டத்துக்குமேல் 4,000 அடியிலிருந்து 7,500 அடியாக உயர்ந்து விடுகிறது.

### புதிய ரயில் பாதை

ரோடு வழியாக எல்லாவித சாமான்களையும் கொண்டு செல்வது கடினமானதால், பர்மாவுக்கும் சீனுவுக்குமிடையே ரயில்பாதை அமைக்க வேண்டுமென்று சீன சர்க்கார் வெகு நாளாக வற்புறுத்திக்கொண்டுவந்திருக்கிருர்கள். இந்த வருஷ ஆரம்பத்தில் கும்மிங்கிலிருந்து கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் ரயில் பாதையுடன், லாஷியோவிலிருந்து ஒரு ரயில் பாதை கட்டி இரண்டையும் சேர்க்கவேண்டுமெனத் தீர்மானமாயிருக்கிறது.

### பிரிட்டனின் உதவி

இந்த ரயில் பாதை கட்டுவதற்கு ஆகும் செலவை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்ளுவார்கள். பிற்காலத்தில் பர்மா சர்க்கார் இஷ்டப்பட்டால் இதை அவர்களிடமிருந்து வாங்கிக்கொள்ளலாம்.

மொத்தப் பாதைகளில் முதல் மூன்றில் இரண்டு பங்கு தூரத்துக்கு ரயில் பாதை பர்மாரோட்டோடுகூடச் செல்லாமல் வேறு வழியாகச் செல்லும். பிறகு கும்மிங்வரை ரோட்டுடன் கூடவே செல்லும். பர்மாவுக்குள் இந்த ரயில் பாதையின் நீளம் 110 மைல் இருக்கும். மலைப்பாங்கான ஷாம் சமஸ்தானப் பிரதேசங்கள் வழியாக இப்பாதை செல்லும்.

பர்மாப் பகுதி ரயில் பாதையை எடுத்துக்கொண்டால், முதல் பாதி ஒன்றும் கஷ்டமில்லை ஆனால் இதற்குப்பிறகு மலைகளைக் குடைந்தும், பாலங்கள் அமைத்தும்தான் பாதை போடவேண்டும். முக்கியமாக சால்வின் நதியைக் கடக்க ஒரு பாலம் அமைத்தாகவேண்டும். இந்த இடத்தில் நதியின் அகலம் 500 அடி இருக்கிறது.

சீனப் பகுதி ரயில் பாதையை எடுத்துக்கொண்டால் அங்கேயும் முதலில் ஒன்றும் கஷ்டமில்லை. ஆனால் அதற்குப்பிறகு ஒவ்வொன்றும் 7,000 அடி உள்ளதும், மிக செங்குத்தாயுள்ளதுமான அநேக குன்றுகளைத் தாண்டியாகவேண்டும். மேகாங் நதியைக் கடக்க ஒரு பெரிய பாலம் அமைத்தாகவேண்டும். சீனப் பகுதியில் முதல் பாதி அவ்வளவு கஷ்டமில்லை. இங்கு வேலையும் அதிகம் செய்து முடித்தாகிவிட்டது. பர்மாப் பகுதி ரயில் பாதையைக் கட்டிமுடிக்க இரண்டு வருஷங்கள் பிடிக்குமென்றும், 20 லட்சம் பவுன் செலவாகுமென்றும் தெரிகிறது.

## 8. விஷி

விஷி அரசாங்கம், பிரெஞ்சு ஆப்பிரிக்காவை ஜெர்மனியிடம் ஒப்புவிக்கவேண்டுமென்று ஹிட்லர் கேட்டிருக்கிறதாகத் தெரிகிறது. ஹிட்லரும், பீத்தாஆம் இதற்காக சந்திக்கப்போகிருர்களாம். இதைப் பற்றிய சில குறிப்புகள் இந்த இதழில் வேறொரு இடத்தில் காணலாம்.

"ஜெர்மன் பட்டறைகளில் வேலை செய்வதற்காக, கைதிகளாகப் பிடிக்கப்பட்ட பிரெஞ்சுக்காரர்களில் யார் யாருக்கு யந்திரவேலை தெரியும், உலோக வேலை தெரியும் என்று ஜெர்மன் அதிகாரிகள் விசாரித்துக்கொண்டிருக்கிருர்கள். இதற்கு விஷி அரசாங்கமும் உதவி புரிந்துகொண்டிருக்கிறது. தளவாடப் பட்டறைகளில் வேலை செய்ய ஒப்புக்கொள்ளும்பட்சத்தில், அவர்களை விடுதலைசெய்து விடுவதாகவும், நல்ல சம்பளம் கொடுப்பதாகவும், அவர்கள் குடும்பத்தை கவனித்துக்கொள்வதாகவும், ஜெர்மானியர் எல்லாக் கைதி முகாம்களுக்கும் தெரிவித்திருக்கிருர்கள். ஆனல் இதனல் பலன் ஒன்றும் ஏற்படவில்லை. ஜெர்மானியருக்கு ஆயிரக் கணக்கில் தொழிலாளர்கள் வேண்டியதாயிருக்கிறது. ஆகவே அவர்கள் ஒவ்வொரு கைதிக்கும் என்ன தொழில் தெரியும் என்று கண்டு பிடிக்கும்படி விஷி அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். விஷி அரசாங்கம் யுத்தக் கைதியினரின் குடும்பங்களையெல்லாம் புது 'படிச் சீட்டுகள் வாங்கிக்கொள்ளும்படி கட்டளையிட்டிருக்கிறது. அதில் கேட்கப்படும் ஒரு முக்கிய கேள்வி, "கைதியாயிருக்கும் நபரின் தொழில் என்ன?" என்பது. இந்தக் கேள்விக்குச் சரியான பதில் அளித்தால்தான் 'படிச் சீட்டு' கொடுக்கப்படும். தப்பான பதில் கொடுக்கப்பட்டால் கடுமையான தண்டனை விதிக்கப்படும். ஜெர்மன் பட்டறைகளுக்கு தொழிலாளிகள் அனுப்புவதில் விஷி அரசாங்கம் அனுகூலமாயிருக்கிறது என்ற விஷயம் விளக்கமாகத் தெரிகிறது.

## 9. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்

யூகோஸ்லாவியாவில், ராணுவத்தைச் சேராத சாதாரண நபர்கள் 2,300 பேரை ஜெர்மானியர்கள் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். நூற்றுக் கணக்கான பள்ளிக்கூடச் சிறுவர்கள் கைது செய்யப்பட்டார்கள்; பலர் கொல்லப்பட்டார்கள்.

## 10. நடு நிலைமை நாடுகள்

தாய்லாந்து 'ரிசர்வ்' பட்டாளங்களை அழைத்திருக்கிறது. தன்னுடைய நடு நிலைமைக்குப் பங்கம் ஏற்பட்டால், யுத்தத்தில் தீவிரமாக இறங்குவதற்கு தாய்லாந்து தயாராயிருக்கிறது.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றன்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**
[சென்னை இன்பர்மேஷன் ஆபீஸர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.